

# சாலை விபத்தில் உயிரிழந்த கழக உறுப்பினர்கள் 4 குடும்பங்களுக்கும் குடும்ப நிவாரண நிதியாக

# தலா ரூ.10 இலட்சம் வீதம் ரூ.40 இலட்சம் - காசோலையினை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!









சென்னை, ஜூன் 12-

மதுரையில் 1.6.2025 அன்று நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “கழக உறுப்பினர்கள் யாராவது எதிர்பாராத விதமாக சாலை விபத்தில் இறந்து போகும் சூழல் ஏற்பட்டால், இறந்த உறுப்பினரின் குடும்ப வாரிசுகள் 21 வயதுக்கு குறைவாக இருந்தால் அந்தக் குடும்பத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில் பத்து இலட்ச ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும். அந்தப் பிள்ளைகளின் படிப்பு, குடும்பச் சூழலுக்கு இந்த நிதி உதவும்.” என்று அறிவித்திருந்தார்.

அந்த வகையில், விபத்தில் மரணமடைந்த திண்டிவனம், இறையனூரைச் சேர்ந்த திருமதி சரிதா - இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த க.முத்தமிழ்செல்வன் - ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வே.சரவணன் - திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.விக்னேஷ் - கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த குப்புசாமி - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கே.ஏ.ராம்பிரசாத் - நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரண்ராஜ் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.பிரகாசம் - திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.மேகலிங்கம் - சேலம் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.முருகன் - விழுப்புரம் மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த மு.இராமதாஸ் - நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த கு.சரவணகுமார், ஈரோடு வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த எம். லிங்கேஸ்வரன் - மதுரை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த என். திருப்பதி - நாமக்கல் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஜி.முத்துராஜா - இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நா.மாரிமுத்து - திருநெல்வேலி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பார்வதி (எ) உஷா - திருப்பூர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த இ.பரத்குமார் ஆகிய 18 குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கியதைத் தொடர்ந்து;

தேனி தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த ப.மணிகண்டன் தனது மனைவி ம.சுகன்யா ஆகியோர், 09.12.2025 அன்று உத்தமபாளையம் - கம்பம் மெயின் ரோடு காக்கில் சிக்கையன்பட்டி பண்டாரம் களம் அருகில் அவர்கள் சென்ற இருசக்கரம் வாகனம் மீது ஆம்னி பேருந்து மோதி விபத்தில் சிக்கியும் - ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வி.கோபாலகிருஷ்ணன் அவர்கள், கடந்த 20.11.2025 அன்று சென்னிமலையிலிருந்து இரவு பணி முடிந்து வீடு திரும்பும்போது வழியில் சென்னிமலை, பெருந்துறை ரோடு, எஸ்எல்என் நகர் அருகில் இருசக்கர வாகனத்தில் வரும்போது வேன் மோதி விபத்தில் சிக்கியும் - தருமபுரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி.சண்முகம் அவர்கள், 10.07.2025 அன்று ஓசூருக்கு வேலை செல்வதற்காகபிளப்பநாயக்கஅள்ளி - ஏ.பாப்பாரப்பட்டி ரோட்டில் எட்டியாம்பட்டி ஏரி மதகு அருகே அவர் சென்ற இருசக்கரம் வாகனம் மீது எதிரில் வந்த மினி லாரி மோதி விபத்தில் சிக்கியும் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், வில்வராயநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த என்.கார்த்திக் அவர்கள், 30.10.2025 அன்று ஜி.எஸ்.டி.சாலை, இருங்குன்றம்பள்ளி பாலாறு பாலம் அருகே அவர் வந்த இருசக்கர வாகனம்மீது அரசு பேருந்து மோதி விபத்தில் சிக்கியும் உயிரிழந்த இந்த 4 குடும்பங்களுக்கும் குடும்ப நிவாரண நிதியாக, தலா ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,

தேனி தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த ப.மணிகண்டன் - திருமதி ம.சுகன்யா ஆகியோரின் மகன் எம்.கௌதம் அவர்களிடமும் - ஈரோடு மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த வி. கோபாலகிருஷ்ணன் அவர்களின் மனைவி திருமதி ஜி. சவிதா அவர்களிடமும் - தருமபுரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த பி. சண்முகம் அவர்களது மனைவி திருமதி எஸ். நதியா அவர்களிடமும் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த என்.கார்த்திக் அவர்களின் மனைவி திருமதி சபிதா அவர்களிடமும் நேற்று முன்தினம் (10-06-2026) காலை வழங்கினார்.

### கோவையில் பரபரப்பு

# ரூ.50 லட்சம் கேட்டு 2 வாலிபர்களை கடத்தி கொலை மிரட்டல்!

## திருப்பூர் - நல்லூர் காவலர்கள் உட்பட 4 பேர் கைது!

திருப்பூர், ஜூன். 12–

ரூ.50 லட்சம் கேட்டு 2 வாலிபர்களை கடத்தி கொலை மிரட்டல் விடுத்ததாக திருப்பூர் நல்லூர் காவலர்கள் உட்பட 4 பேரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை போத்தனூர் அடுத்த சீத்தனபுரம், இந்திரா நகரைச் சேர்ந்தவர் பரமேஸ்வரி (31). இவரது தம்பி நவீன் (29) இவர் வெள்ளலூர் ஹவுசிங் யூனிட் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் தங்கிருந்து ஆன்லைன் டிரேடிங் வேலை செய்து வந்தார்.

கடந்த 8ம் தேதி மதியம், பரமேஸ்வரியின் செல்போனுக்கு ஒரு அழைப்பு வந்தது. அதில் பேசிய மர்மநபர், ”உன் தம்பி நவீனை நாங்கள் கடத்தி வைத்துள்ளோம். அவர் உயிரோடு வேண்டும் என்றால் உடனடியாக ரூ.50 லட்சம் பணம் தர வேண்டும் என்று கூறிவிட்டு இணைப்பை துண்டித்துள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த பரமேஸ்வரி, பதறியடித்துக் கொண்டு தம்பியின் வீட்டிற்குச் சென்று பார்த்தார். அப்போது வீடு பூட்டப்பட்டிருந்தது, பல்வேறு இடங்களில் தேடி பார்த்தும் கிடைக்க வில்லை.

செல்போனில் தொடர்பு கொண்ட போது சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. இதற்கிடையே நவீனின் நண்பர் நிர்மல்குமார் (29) என்பவரின் மனைவி ஜெனிதா, பரமேஸ்வரியைத் தொடர்பு கொண்டு மதியம் 12 மணி முதல் தன் கணவரையும் காணவில்லை என தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அன்று இரவு ஜெனிதாவின் செல் போனுக்கு நவீனின் எண்ணில் இருந்து ஒரு அழைப்பு வந்துள்ளது. அதில் பேசிய கடத்தல்காரர்கள், ”நவீன் மற்றும் நிர்மல்குமார் ஆகிய இருவரையும் நாங்கள் தான் கடத்தியுள்ளோம். கேட்கும் பணத்தைக் கொடுக்காவிட்டால் இருவரையும் கொலை செய்து விடுவோம் என மிரட்டியுள்ளனர்.

இதனால், பயந்து போன குடும்பத்தினர் உடனடியாக போத்தனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்தனர். இதையடுத்து காவல்துறையினர் அவர்கள் இருவரும் பணம் கொடுக்கல், வாங்கல் தகராறில் கடத்தப்பட்டார்களா? அல்லது திட்டமிட்டு பணம் பறிக்கும் கும்பல் இதில் ஈடுபட்டுள்ளதா? என்று பல்வேறு கோணங்களில் தனிப்படை அமைத்து தீவிரமாக விசாரித்து வந்தனர்.

**காவல் துறையினர் மடக்கிப் பிடித்தனர்!**

தொடர்ந்து காவல்துறையினர் மர்ம நபர்கள் அழைத்த செல்போன் எண் மற்றும் சிசிடிவி காட்சிகளை வைத்து தேடி வந்தனர். இதற்கிடையே காவல்துறையினர் பணத்தை தயார் செய்து நவீன் மற்றும் நிர்மல்குமாரின் குடும்பத்தினரிடம் கொடுத்து கடத்தல்காரர்களிடம் எங்கு வர வேண்டும் என கேட்குமாறு கூறியுள்ளனர்.

கடத்தல் காரர்கள் திருப்பூர் வந்து பணத்தை கொடுத்து இருவரையும் மீட்டு செல்லும் படி தெரிவித்துள்ளனர். இதையடுத்து இருவரது குடும்பத்தினரும் திருப்பூர் சென்றனர். அவர்களை காவல்துறையினர் சாதாரண உடையில் பின் தொடர்ந்தனர். அப்போது, பணத்தை வாங்க வந்த இருவரை போத்தனூர் காவல் துறையினர் மடக்கிப் பிடித்தனர்.

அதில் அவர்கள் இருவரும் திருப்பூர் நல்லூர் காவல் நிலையத்தில் காவலர்களாக பணிபுரிந்து வரும் மோகன் (37) மற்றும் ஆனந்த் (38) என்பது தெரியவந்தது. காவல்துறையினர் அவர்களை கோவை அழைத்து வந்து விசாரணை நடத்தியதில் நவீன் மற்றும் நிர்மல்குமார் ஆகியோரை திருப்பூரை சேர்ந்த காளிதாஸ் (31) மற்றும் ராம்குமார் (31) ஆகியோர் திருப்பூரில் ஒரு பகுதியில் அறையில் மறைத்து வைத்திருப்பதாக கூறியுள்ளனர். காவல்துறையினர் அதிரடியாக அங்கு சென்று இருவரையும் மீட்டு, கடத்தல்காரர்கள் காளிதாஸ் மற்றும் ராம்குமாரையும் பிடித்தனர். அவர்களை காவல் நிலையம் அழைத்து வந்து விசாரணை நடத்தினர். விசாரணையில், அவர்கள் பணம் கொடுக்கல், வாங்கல் தகராறில் இருவரையும் கடத்தியதாகவும், தங்களுக்கு திருப்பூர் காவலர்கள் இருவரும் உதவியதாகவும் தெரிவித்துள்ளனர். இதைத்தொடர்ந்து காவலர்கள் மோகன், ஆனந்த் மற்றும் காளிதாஸ், ராம்குமார் ஆகிய 4 பேரை கைது செய்து கடத்தலுக்கு வேறுயாரெல்லாம் உதவி உள்ளார்கள்? திருப்பூர் காவலர்களுக்கு கடத்தலில் என்ன தொடர்பு என்பது குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த கடத்தப்பட்ட சம்பவம் கோவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**ஆன்லைன் லாட்டரி விற்பனை!**

கடத்தப்பட்ட நவீன் மற்றும் நிர்மல்குமார் பல்வேறு ஆன்லைன் வேலைகளை செய்து வந்துள்ளனர். அதேபோல தடை செய்யப் பட்ட ஆன்லைன் லாட்டரி விற்பனையிலும் ஈடுபட்டு வந்ததாக தெரிகிறது. அதில் மோசடியில் ஈடுபட்டதால் அவர்கள் கடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் காவல்துறையினர் நவீன் மற்றும் நிர்மல்குமாரிடம் விசாரணை நடத்தி உள்ளனர். இதில் அவர்கள் ஆன்லைன் லாட்டரி விற்பனை செய்தது உறுதி செய்யப்பட்டதாக தெரிகிறது. இதனால் காவல்துறையினர் அவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த திட்டமிட்டு உள்ளனர்.

### பாகனேரி அருகே நகரம்பட்டியில்

# சுதந்திரப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாள்!

## கே.ஆர்.பெரியகருப்பன் – தி.மு.க.வினர் மரியாதை!

சிவகங்கை ஜூன் 12.

சிவகங்கை மாவட்டம் பாகனேரி அருகே உள்ள நகரம் பட்டிகிராமத்தைச் சேர்ந்தவர் வாளுக்கு வேலி அம்பலம். இவர் ஆங்கிலேயர்கள் மாமன்னர் மருதுபாண்டியர் களை திருப்பத்தூரில் தூக்கிலிட உள்ளதாக தகவல் கிடைத்ததும் அவர்களை காப்பாற்றுவதற்காக படைகளுடன் சென்ற பொழுது கத்தப்பட்டு என்ற கிராமத்தில் ஆங்கிலேயர்களால் சுற்றி வளைக்க பட்டு வீர மரணம் அடைந்தார்.

வாளுக்கு வேலி அம்பலம் மரணம் அடையவில்லை என்றால் மாமன்னர் மருதுபாண்டியர்களை தூக்கிலிடப்படுவதி லிருந்து காப்பாற்றி இருப்பார் என்று கூறப்படுகிறது.

அத்தகைய சுதந்திரப் போராட்ட வீரரின் தியாகத்தை போற்றும் வகையில் எதிர் கால சந்ததியினர் வாளுக்கு வேலி அம்பலம் வரலாறை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் நகரம் பட்டிகிராமம் மற்றும் சுற்றுப்புற கிராமமக்கள் சார்பில் அ.தி.மு.க. அரசிடம் நீண்ட நாட்களாக கோரிக்கை வைக்கப்பட்டது.

அப்போது இந்த கோரிக்கை நிறைவேற்றப்பட வில்லை. கடந்த தி.மு.க. ஆட்சியில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனிடம் நகரம் பட்டிகிராமமக்கள் வாளுக்கு வேலி அம்பலம் சுதந்திர போராட்டத்தில் மாமன்னர் மருதுபாண்டியர் களை காப்பாற்ற உயிர் நீத்த தியாகத்தை எடுத்து கூறி நகரம் பட்டியில்சிலை அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்தார்கள்.

அவர்களது கோரிக்கையை தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலினிடம் எடுத்து கூறி உரிய நடவடிக்கை எடுப்பதாக அப்போதைய அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நகரம் பட்டிகிராமமக்களிடம் உறுதி அளித்தார்.

முதல்வரிடம் நகரம் பட்டிகிராம மக்களின் கோரிக்கையினை விளக்கி கூறினார். சிறுகதை மன்னர் எஸ்.எஸ்.தென்னரசு எழுதிய செம்மாதுளை நூலில் கழகத் தலைவர் கலைஞர் தென்பாண்டி சிங்கம் நூலில் வாளுக்கு வேலி அம்பலம் குறித்து எழுதி உள்ளதை விளக்கி கூறினார். வாளுக்கு வேலி அம்பலத்தின் வரலாற்றினை அறிந்த முதல்வர் ஸ்டாலின் ருபாய் 50 லட்சம் செலவில் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி நகரம் பட்டியில் வாளுக்கு வேலி அம்பலம் சிலை அமைவதற்கான ஏற்பாடுகளை அப்போதைய அமைச்சர் சாமிநாதன் முயற்சியால் வாளுக்கு வேலி அம்பலம் சிலை அமைக்கப்பட்டு முதல்வர் மு.க.ஸ்டாலினால் திறந்து வைக்கப்பட்டது . அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் சூன் மாதம் 10ம்தேதி வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி நேற்று முன்தினம் சூன் 10ஆம் தேதி வாளுக்கு வேலி அம்பலம் பிறந்த நாளை முன்னிட்டு நகரம் பட்டியில் உள்ள வாளுக்கு வேலி அம்பலம் சிலைக்கு முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் .

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் திருமதி தமிழரசி ரவிக்குமார், மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், முன்னாள் எம்.எல்.ஏ எஸ்.மாரியப்பன் கென்னடி,பொதுக்குழு உறுப்பினர்ஜெ. மதார் சேட், அம்பலமுத்து, ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆர்.எம். கென்னடி,யோக. கிருஷ்ணகுமார், திருமலை முத்துராமலிங்கம், எம். அண்ணாதுரை, துரை.ராஜா மணி, லெ.மு. ரவிச்சந்திரன், விராமதி மாணிக்கம், பூமணி, கே.பாலசுப்பிரமணியன், நா.நெடுஞ்செழியன் குன்னக்குடி சுப்பிரமணியன், கா. வெங்கட்ராமன்,அ.முத்துச்சாமி, பேரூர் கழகச் செயலாளர்கள் கதிர் வேல், நாகூர் கனி , காரைக்குடி மாநகர செயலாளர் துணை மேயர்நா.குணசேகரன்,

மானாமதுரை நகர் கழகச் செயலாளர் க.பொன்னுச்சாமி, மாவட்ட சுற்றுச்சூழல்அணி அமைப்பாளர் எஸ். எஸ் .ஏ.வல்லபாய் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி . ராஜ்குமார் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் ,பத்மா தகவல் தொழில் நுட்ப அணி காளிமுத்து, மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப் கான்,அயலக அணி சன் சீமான் சுப்பையா, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன், ஆதி. அழகர்சாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மதிவாணன், கார்த்தி மற்றும் நிர்வாகிகள் தமிழரசன், மலைமேகு, ஒன்றிய துணைச் செயலாளர்கள் சிவபுரி சேகர், எஸ். முத்துக்குமார், எஸ்.ஆர்.பி.ரமேஷ், ஒய்.கா.சோமு, குரு,மனோகரன், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக வாளுக்கு வேலி நினைவிடத்திற்கு வருகை தந்த கேஆர்.பெரியகருப்பனை வாரிசுதாரர்கள் செல்வராஜ் கண்ணதாசன் வழக்கறிஞர் கலைமணி மற்றும் கிராம மக்கள் வரவேற்றார்கள்.



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒருங்கிணைந்த ஒன்றிய கழக அலுவலகமான தளபதி அன்பகத்தில் முன்னாள் அமைச்சர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் கழக இருவண்ண கொடியேற்றி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவ வெண்கலச் சிலைக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஆண்டிமடம் தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ஆர்.கலிய பெருமாள், ஆண்டிமடம் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் இரா.செந்தில்குமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.




கோத்தகிரியில் நடைபெற்ற நீலகிரி மாவட்ட கட்டுமானப் பொறியாளர் சங்க ஆண்டு விழா மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கௌரவிப்பு விழாவில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு,கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் திராவிட மணி ஆகியோர் கலந்துகொண்டு, விழாவினை துவக்கி வைத்தனர். இவ்விழாவில் மாவட்ட அவைத்தலைவர் போஜன்,கூடலூர் நகர செயலாளர் இளஞ்செழியன் பாபு, உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் சங்க நிர்வாகிகள் சம்பத், விஜயகாந்த், அசோக்குமார், கிறிஸ்தோபர், தமிழக பாண்டிச்சேரி பொறியாளர் சங்க நிர்வாகி ராகவன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.